ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1939/24 – 2015 නොවැම්බර් 05 වැනි බ්‍රහස්පතින්දා – 2015.11.05
*1939/24 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின்படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் முனசிங்ஹ காரியவசம் அப்புஹாமிலாகே தொன் சோமதாச குணவர்தன ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 642ஏ - கல்பாத மேற்கு கிராம சேவகர் பிரிவில், கல்பாத கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2015.05.10 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட க/மில்/15/82 ஆம் இலக்கம் கொண்ட முதற் சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட 0.0276 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் எல்லைகள்:

*1.* **துண்டு இல. 1 - மோதரகட கும்புர அல்லது மஹா மோதரகட கும்புர அல்லது மோதர கும்புர - விஸ்தீரணம் : சுமார் 0.0276 ஹெக்டயார்**

வடக்கு மற்றும் கிழக்கு : வீதி (வீ.அ.அ.); தெற்கு : இல்லேபெருமா ஆராச்சிகே புஷ்பா பிரியங்கா குணதிலக உரிமை கோரும் மோதரகட கும்புர அல்லது மஹா மோதரகட கும்புர அல்லது மோதர கும்புர மற்றும் கபு வாய்க்கால்; மேற்கு : இல்லேபெருமா ஆராச்சிகே புஷ்பா பிரியங்கா குணதிலக உரிமை கோரும் மோதரகட கும்புர அல்லது மஹா மோதரகட கும்புர அல்லது மோதர கும்புர, கபு வாய்க்கால் மற்றும் வீதி (வீ.அ.அ.).

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,
காணி அமைச்சர்.

*எனது இல. : 4-3/6/2014/எச்டபிள்யு/361.*
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
*2015.09.25.*

*11-514*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*